www.padippakam.com

Liberation Tigers Of TAMIL EELAM

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

-ஜேர்மன் கிளை-

20.10.86

ஜேர்மன்வாழ் தமிழீழ மக்களின் கவனத்திற்கு.

## போலி அமைப்புக்களைத் தடைசெய்கிறோம்

கடந்த சில தினங்களிற்குமுன் தமிழீழ விடுதலைப்புலிகளை கண்காணிப்பதற்கென ஜேர்மன் அரசாங்கத்தால் 'புலிகள் விசேடவிசாரணைக்குழு' என ஓர் குழு நியமிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

தமிழீழ விடுதலைப்போராட்டம் தொடங்கிய காலம்தொட்டு பேச்சளவில் சித்தாந்தமும், தத்துவமும் பேசிக்கொண்டு காலத்திற்கு காலம் புதிய பாணியில் மக்களை ஏமாற்றி வந்ததோடு மட்டுமல்லாமல் விடுதலை இயக்கம் என்ற பெயரில் கொலைகள், கொள்ளைகள் போன்ற சமூக விரோதச் செயல்களைச் செய்தவர்களும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மறந்து மக்களோடும், தமக்குள்ளும் போராட்டம் நடாத்தி சொந்தக் காரணங்களுக்காக நூற்றுக்கணக்கானோரைக் கொலை செய்தவர்களும், மக்களால் நம்பிக்கை இழந்த நிலையில் விடுதலைப் போராட்டத்திலிருந்து தூக்கி எறியப்பட்டவர்களுமான 'TELO PLOT EPRLF EROS ஆகிய குழுக்கள், தமிழீழ மக்களின் முழுமையான ஆதரவைப் பெற்று தமிழீழவிடுதலைக்காகப் போராடிவரும் தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயல்ப்பாட்டை தடை செய்யும் நோக்கில் ஜேர்மன் அரசாங்கத்திற்கும், ஜேர்மன் மக்கள் மத்தியிலும் பொய்த் தகவல்களைக் கொடுத்து வந்ததோடு, நாம் மக்களைமிரட்டிப் பணம்பறிப்பதாக எந்த ஒரு ஆதாரமுமற்ற பொய்க் குற்றச் சாட்டை எம்மீது சுமத்தி ஜேர்மன் அரசாங்கத்திற்கு காட்டிக் கொடுத்துள்ளதை நாம் ஆதாரத்தோடு தெரிந்து கொண்டுள்ளோம். இது போன்ற பல பொய்த் தகவல்களை ஜேர்மன் அரசாங்கத்திற்கு கொடுத்ததன் பேரிலேயே எமது இயக்கத்தின் செயற்பாட்டை முழுமையாக தடைசெய்யும் விதத்தில் ஓர் விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது.

மக்களின் முழுமையான ஆதரவைப் பெற்று சரியான பாதையிலே விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் ஓர் விடுதலை இயக்கத்தை முதலாளித்துவ சக்திகளுக்கு காட்டிக் கொடுப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப்போராட்டத்தை பின்னடையச் செய்யும் இப் பிற்போக்குவாதிகளின் துரோகச் செயல்களை நாம் தொடர்ந்து அனுமதிக்கப்போவதில்லை.

மேற்படி குழுக்களினால் ஆதாரமின்றி எமக்கெதிராக வெளியிடப்படும் எந்த ஒரு பிரசுரங்களோ, பத்திரிகைகளோ எவராலும் விநியோகிக்கப்படக்கூடாது என்பதையும் TELO PLOT EPRLF ஆகிய குழுக்களின் பெயரில் எவரும் பணம் சேகரிக்கக்கூடாதென்பதையும் அவர்களின் பொய்யான கவர்ச்சிப் பிரச்சாரங்களை நம்பி அக் குழுக்களின் கீழ் செயற்படும் பிரதிநிதிகளுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

-ஜேர்மன் கிளை-

TELO PLOT EPRLF ஆகிய குழுக்களின் செயற்பாட்டை நாம் ஜேர்மனியில் தடை செய்கிறோம்:-

காரணம்

(1) ரெலோவினர் தமிழீழத்தில் கொலைகள், கொள்ளைகள் போன்ற சமூக விரோதச் செயல்களைத் தொடர்ச்சியாகச் செய்ததன் காரணமாகத் தமிழீழத்தில் முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே.

(2) கடந்த காலத்தில் 'எண்ணம்' பத்திரிகை வெளியிட்டவர்கள் போதை வஸ்து கடத்தலில் ஈடுபட்டிருந்ததோடு, அதில் பெறப்பட்ட பணத்திலேயே அப்பத்திரிகையும் வெளியிடப்பட்டது. இவர்களுடன் இணைந்து போதை வஸ்துப் பாவித்த ஓர் பெண் இறந்ததன் காரணமாக இவர்களுள் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு இன்று வரை சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார். இவர்களே இன்று ஜேர்மனியில் ரெலோவுக்குப் பொறுப்பாளர்களாகவுள்ளனர்.

(3) 'சிந்தனை' என்ற பத்திரிகையொன்று வெளியிடப் பட்டுவருகிறது. இதற்கான பணம் எங்கிருந்து பெறப்படுகிறது? (இதன் விபரம் ஆதாரத்துடன் எம்மிடமுள்ளது)

(4) புளொட்டினர் தமிழீழ விடுதலைக்காக தமிழீழ மக்களிடமிருந்து பெறப்பட்ட பெருந்தொகையான பணத்தை எந்தவிதத்திலும் விடுதலைக்காகப் பயன்படுத்தாது தனி நபர்கள் மோசடி செய்துள்ளனர்.

(5) விடுதலைக்காகப் போராடச் சென்ற பல இளைஞர்களைத் தனிப்பட்ட காரணங்களுக்காக கொலை செய்ததோடு மக்கள் மத்தியிலும் பல கொலைகள், கொள்ளைகள் செய்துள்ளனர்.

(6) ஜெர்மனியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரில் தமிழீழ விடுதலைக்காக தமிழ் மக்களிடமிருந்து பெறப்பட்ட பணத்தில் 17,000 டொச் மார்க் வரை மோசடி செய்தவர் இப்பொழுது புளட்டின் ஜேர்மன் பொறுப்பாளராகவுள்ளார்.

(7) புளட்டினது அராஜகப் போக்கும், கொலைகள், கொள்ளைகள் என்பனவும் மக்கள் மத்தியில் அம்பலமாகியதும், மக்கள் முன் சொல்ல முடியாத நிலை ஏற்பட்டபோது 'ஏதிலிகள் புனர்வாழ்வு நிதியம்' என்ற பெயரில் அகதிகளுக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறிக் கொண்டு இந்தியாவிலிருந்து நடிகைகளை வரவழைக்கப் போவதாகவும் மக்களை ஏமாற்றிப் பணம் சேகரித்தனர். அப்பணத்தின் பெரும் பகுதியும் புளட்டினரால் மோசடி செய்யப்பட்டுவிட்டது.

(8) ஈபிஆர்எல்எவ் இனர் தமிழீழத்தில் கொலைகள், கொள்ளைகள் போன்ற சமூகவிரோதச் செயல்களைத் தொடர்ந்து செய்து வருகின்றனர்

(9) ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்த பலர் ஆரம்ப காலத்திலிருந்தே ஜெர்மனியில் போதை வஸ்துக் கடத்தலில் ஈடுபட்டு வருகின்றனர்.

(10) TELO PLOT EPRLF EROS ஆகிய நான்கு குழுக்களும் சேர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான பொய்த் தகவல்களை முதலாளித்துவ சக்திகளுக்குக் கொடுப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முறியடிக்க முதலாளித்துவ சக்திகளுக்குத் துணை போகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

– ஜேர்மன் கிளை –

இதுபோன்ற சட்டவிரோத செயல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டு தமது சட்ட விரோதச் செயல்களைத் தொடர்ந்து செய்வதற்காகவே இப் பிற்போக்குவாதிகள் முதலாளித்துவ சக்திகளுடன் இணைந்து தமிழீழ விடுதலைப் புலிகளைப் பற்றி பொய்த் தகவல்களை ஜேர்மன் அரசாங்கத்திற்கு கொடுத்து எமது செயற்பாட்டைத் தடை செய்ய முயற்சிக்கின்றனர்.

தமது சொந்தப் பெயரில் மக்கள்முன் செல்லமுடியாத TELO, PLOT, EPRLF, EROS ஆகிய குழுக்களால் 19-09-86 அன்று ஸ்ருட்காட் வாழ் தமிழ் மக்கள் என்ற பெயரிலே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கண்டனம் தெரிவிக்கவும், மீண்டும் மக்களை ஏமாற்ற ஓர் போலி அமைப்பை உருவாக்குவதற்காகவும் கூட்டமொன்று நடாத்தப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஜனநாயகம் போதிக்கும் இவர்கள் அக்கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களிற்கு தலைமை உரையில் கூறியதாவது, தமிழீழ விடுதலைப் புலிகளிற்கு கண்டனம் தெரிவிக்கவே அக் கூட்டம் கூட்டப்பட்டதாகவும், வேறு எந்த இயக்கத்தைப் பற்றியும் எவரும் கண்டித்துப் பேசமுடியாதென்றும் கூறப்பட்டது. இதையடுத்து சிலர் கேள்வி கேட்க முற்பட்டபோது எவரும் கேள்வி கேட்க முடியாதென்றும் அடக்கப்பட்டனர்.

அனைத்து தடைகளையும் முறியடித்து மிகசிறப்பாக செயற்பட்டுவரும் எமது இயக்கத்தின் வளர்ச்சி கண்டு பொறுக்க முடியாத இச் சதிக்கும்பல்கள் இரண்டாவது தடவையாகவும் 12-10-86 அன்று ஸ்ருட்கார்ட் நகரில் ஓர் கூட்டம் நடாத்தத் தீர்மானித்திருந்தனர். இதை அறிந்த தமிழீழ விடுதலையில் பற்றுக் கொண்ட மக்களில் சிலர் அவ்விடத்திற்குச் சென்று மேற்படி கூட்டம் நடாத்தக் காரணமானவர்களில் ஒருவரும், ரெலோவின் தலைமைப் பிரதிநிதிகளில் ஒருவருமானவரைத் தாக்கியதோடு கூட்டமும் நடாத்தமுடியாது செய்துள்ளனர். (மூன்று மணிக்கு நடாத்தப்படவிருந்த இக்கூட்டத்திற்கு நான்கு மணியாகிய பின்பும் மேற்படி நான்கு குழுக்களினரும் உட்பட பதினைந்திற்கும் உட்பட்டவர்களே சமூகமளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது).

தமிழீழ மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவே நாம் போராடி வருகிறோம். எனவே உண்மையாகவே தமிழீழ விடுதலையில் பற்றுக் கொண்ட மக்கள் தமது அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவென எந்த ஒரு போலி விடுதலை இயக்கங்களினதும் தொடர்பற்ற ஓர் மக்கள் அமைப்பை உருவாக்குவார்களாக இருந்தால் நாம் அவர்களுக்கு ஆதரவளிக்க தயாராகவுள்ளோம். ஆனால் மக்கள் கமிட்டி என்ற பெயரில் சமூக விரோதிகளும், தேசத்துரோகிகளும் இணைந்து மக்களை மீண்டும் மீண்டும் ஏமாற்றவும் தமிழீழ விடுதலைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப்புலிகளை முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளுக்கு காட்டிக் கொடுப்பதன்மூலம் தமிழீழ விடுதலையைப் பின் தள்ளும் செயலையும் நாம் அனுமதிக்கப் போவதில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தோடு மாத்திரம் நில்லாது அகதிகளை பராமரிப்பது தொடக்கம் மருத்துவ வசதி, கல்வி வசதி, உணவுற்பத்தி, கைத்தொழிற்சாலைகள் உட்பட உள்ளூராட்சி நிர்வாகம் வரை பல்வேறு வேலைத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றனர். அதே வேளையில் தமிழீழ விடுதலை என்ற பெயரிலும், அகதிகள் என்ற பெயரில்

படிப்பகம்

www.padippakam.com

ஜேர்மனியில் சில அமைப்புக்களை உருவாக்கி தமிழ் மக்களிடம் பணத்தைச் சேகரித்து ஒரு சிலர் மோசடி செய்து கொள்கின்றனர். இதற்கு ஆதாரமாக 1983 ம் ஆண்டு பிராங்போர்ட் (FRANKFURT) நகரில் அகதிகள் என்ற பெயரில் தமிழ் மக்களிடமிருந்து சேர்க்கப்பட்ட ஐம்பதினாயிரம் டொச்மார்க்கிற்கும் மேற்பட்ட பணம் இதுவரை தமிழீழ அகதிகளிற்குப் போய்ச் சேரவில்லை. இந்நிலையைத் தொடர்ந்தும் அனுமதிக்கக்கூடாது என்ற காரணத்தினால் இது போன்ற அமைப்புக்கள் தமிழ் மக்களிடமிருந்து பணம் சேகரிப்பதை மாத்திரம் நிறுத்தும்படி கோரியுள்ளோம்.

இன்று தமிழீழத்தில் மக்கள் தமிழீழவிடுதலைப்புலிகளுடன் முழுமையாக அணிதிரண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மிக வேகமாக முன்னெடுத்துச் செல்லுகின்றனர். ஜேர்மனியில் வாழும் தமிழீழ மக்களும் இந்நிலையை உணர்ந்து தமது முழுமையான பங்களிப்பைச் செலுத்தி வருகின்றனர். அதே நேரத்தில் ஒரு சிலர் விடுதலையைப் பற்றி எந்த ஒரு சிந்தனையு மில்லாது, பார்வையாளர்கள், விமர்சகர்கள் என்ற நிலையில் வாழ்கின்றனர். அத்தோடு கடந்த காலங்களில் போலி விடுதலை அமைப்புக்களை நம்பி ஆதரவளித்த ஒரு சில மக்கள் அவர்களது தவறான போக்கினால் வெறுப்பும், விரக்தியுமுற்று விடுதலைப் போராட்டத்திலிருந்து ஒதுங்கியுள்ளனர். தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு பகுதி மக்கள் மாத்திரம் தமது உயிர்களையும் உடைமைகளையும் முழுமையாக அர்ப்பணித்துப் போராட்டத்தை நடாத்தும்போது அதே நாட்டில் வாழப்போகும் இன்னுமோர் பகுதியினர் எந்த ஒரு பங்களிப்பும் செலுத்தாது ஒதுங்கியிருப்பதை எந்த ஒரு மக்களும் அனுமதிக்கமாட்டார்கள் என்ற நிலையில் தமிழீழத்தைச் சேர்ந்த முழுமக்களையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான பங்களிப்பைச் செலுத்துமாறு ஒவ்வொரு மக்களையும் தனித்தனியாகச் சந்தித்து கேட்டுவருகிறோம். அத்தோடு தமிழீழ மக்களின் முழுமையான சனத்தொகைக் கணிப்பீட்டை மேற்கொள்வதற்கான விபரங்களையும் சேகரித்து வருகிறோம். உண்மை இவ்வாறிருக்க நாம் மக்களை மிரட்டிப் பணம் பறிப்பதாக எந்த ஒரு ஆதாரமுமற்ற பொய்த் தகவலை ஜேர்மன் அரசாங்கத்திற்கு கொடுத்துள்ளனர்.

நாம் எமது விடுதலைப் போராட்டத்தை முதலாளித்துவ ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மாத்திரமில்லாமல் சமூகவிரோதிகள், தேசத்துரோகிகளிற்கு எதிராகவும் நடாத்த வேண்டி உள்ளது. முதலாளித்துவ ஏகாதிபத்தியவாதிகள் எமது போராட்டத்தை எப்படி பயங்கரவாதம் என்று வர்ணிக்கிறார்களோ அதே போன்று சமூக விரோதிகளும், தேசத்துரோகிகளுமே எமது போராட்டத்தை அராஜகவாதம், சர்வாதிகாரம் எனக் கூறுகிறார்கள்.

மக்களே! ஜனநாயகம் என்ற போர்வையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முறியடிக்க முதலாளித்துவ சக்திகளுக்கு துணைபோகும் இப் போலி அமைப்புக்களை நிராகரியுங்கள். மீண்டும் தமிழீழ மக்களை ஏமாற்றப் புறப்பட்டுள்ள இத் துரோகிகளை இனங்கண்டு கொள்ளுங்கள்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழீழ விடுதலைப்புலிகள்
ஜேர்மன் கிளை

படிப்பகம்